# தெல்லிப்பழையில் புலிகளின் கண்ணிவெடிக்கு ரோணுவம் காயம்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழையில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடாத்திய நிலக் கண்ணிவெடியில் இராணுவத்தினரின் வாகனம் ஒன்று சிக்கி சிதறியுள்ளதுடன் அதில் பயணம்செய்தவர்களில் ஆறு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மாலை 4:30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப பிரதேசம் எனக்கருதப்படும் பகுதியிலேயே இக்கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் காயமடைந்த படையினர் உடனடியாக பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டனர். க.ரி

விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 31 இதழ் 224
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16 09 1995

## தியாகி திலீபன் நினைவுதினம் எழுச்சியுடன் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
தியாகி லெப் கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவு நாள் நேற்று குடாநாடு பூராவும் ஆரம்பமானது. தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் இம்மாதம் 26ம் திகதி நிறைவுபெறும்.

நேற்று ஆரம்பமான அஞ்சலி நிகழ்வையொட்டி வீதிகள் தோறும் வாழைமரம் தோரணங்கள் கட்டப்பட்டு.
(6ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# 15 இராணுவத்தினர் உயிரிழப்பு!

## கவச வாகனம் அழிப்பு

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பில் நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். பத்து நிமிடங்கள் வரை இடம்பெற்ற இத் தாக்குதலின்போது உதவிக்கு வந்த படையணிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் பவள் கவசவாகனம் ஒன்றும் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.
[5-ம் பக்கம் பார்க்க]

## ஒன்பது இராணுவ உடல்களும் நவீன ஆயுதங்களும் மீட்பு

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நேற்றைய தாக்குதலின்போது இராணுவத்தினரின் 9 உடல்களும் பல நவீன ரக ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

இத் தாக்குதலின்போது—

★ ரி-81 எல்.எம்.ஜி 01
★ ஏ.கே.எல்.எம்.ஜி 02
★ ஏ.கே. துப்பாக்கிகள் 08

(6ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தவே அவ்வியக்கம் தடைசெய்யப்படவில்லை

### அமெரிக்க இலங்கைத் தூதுவர் தகவல்

(வாஷிங்டன்)
இனப்பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்கள் நடாத்தும் நோக்கிலேயே இலங்கை அரசு புலிகள் இயக்கத்தை தடை செய்யவில்லையென அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதர் திரு. ஜெயந்ததனபால கூறியுள்ளார்.

இலங்கையில் விடுதலைப் புலி
[6ம் பக்கம் பார்க்க]

## வலிகாமத்தை நோக்கி படையினர் உக்கிரமான ஷெல் தாக்குதல்

### இளம் பெண் பலி; மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்று காலை வலிகாமம் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி உக்கிர ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இளம் பெண் ஒருவர் பலியானார். மூவர் காயமடைந்தனர். மக்கள் குடியிருப்புக்கள் சேதமடைந்தன.

குப்பிளான் வீரமனை பகுதியைச் சேர்ந்த சபாரத்தினம் சுகந்தினி (வயது 19) என்ற இளம் பெண்ணே ஷெல் தாக்குதலில் பலியானவராவர். பொன்னையா பத்மநாதன்
(6-ம் பக்கம் பார்க்க)

## புன்னாலைக்கட்டுவன் மோதலில் சிப்பாய் பலி; நால்வர் காயம்

[கொழும்பு]
புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானதாகவும் நால்வர் படுகாயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் காலை 90 இராணுவத்தினர் அடங்கிய அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் புன்னாலைக் கட்டுவன்
(6ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை தாக்குதலில் ஆறு ஊர்காவலர் பலி

(அம்பாறை)
அம்பாறை மாவட்டத்தில் நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஆறு ஊர்காவல் படையினர் பலியானதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள புலாவணை என்றஇடத்தில் கால்நடையாக ரோந்து சென்ற ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஆறு ஊர்காவல் படையினர் அந்த இடத்தில் இறந்து விட்டதாகவும், பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. வி-ரி

## வெளிநாட்டு உதவி நாடப்படுகிறது

(கொழும்பு)
கடலில் வீழ்ந்த 'அன்ரனேவ்' விமானத்தைக் கண்டுபிடிப்பதற்கு வெளிநாட்டு ஆலோசகர்களின் உதவியை சிறிலங்கா அரசு நாடியுள்ளது.

இந்த விமானத்தின் சிதைவுகள் 1000 அடிக்குக் கீழ் இருப்பதால், இலங்கையிலுள்ள சுழியோடிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை விமானம்விழுந்து நொருங்கியதற்குரிய காரணத்தை அவசியமாகக் கண்டுபிடிக்க வேண்டியிருப்பதால்தான், அரசாங்கம் வெளிநாட்டு ஆலோசகர்களை நாடியுள்ளது. ம-ரி

"ஈழநாடு"
வாரமலர்
17.09.95
[ஞாயிறு]

★ மு. திருநாவுக்கரசு
★ சிரித்திரன் சுந்தர்
★ சு. அமரேசன்
★ ச. தியாகராசா
★ சக்கராயுதன்
★ மு. வே. யோ. வாஞ்சிநாதன்

ஆகியவர்களின் படைப்புகளுடன் உண்மைக்கதை, சிறுவர் அரங்கம், உலக வலம் போன்ற பல்சுவை அம்சங்களுடன் வெளிவருகின்றது

விலை ரூபா 6 மட்டுமே

தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்
இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்
— தியாகி திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

[எ 5303]

## வரி விளம்பரம்

### பிரம்புப் பின்னல்

பிரம்பிலான சகல பின்னல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். ராஜன் பின்னலகம், 286, அருச்சுனா வீதி ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (எ-5306)

### தேவை

வெற்று ஜாம் போத்தல்களும், தரமான விளாம்பழங்களும் தேவை. உடுவில் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள ரேஸ் பிரான்ட் இனிப்பு உற்பத்தி நிலையத்தில் கொள்வனவு செய்யப்படும்.
(எ-5302)

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப்போத்தல், சகலவிதமானரோச்லைற், விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-5244)


# புலிகள் மீதான அச்சம் தொடர்கிறது முக்கியநிகழ்விற்கு சந்திரிகாவரவில்லை

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் பற்றி அச்சம் தொடர்வதால் ஜனாதிபதி சந்திரிகா தான் கலந்து கொள்ளவேண்டிய முக்கிய நிகழ்ச்சி ஒன்றுக்கு இறுதி வரை செல்லவேயில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் நடைபெற்ற சமூக வளர்ச்சி மாநாட்டில் இறுதிநேரம் வரை கலந்து கொள்ளாததற்கு புலிகள் தனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாமென்ற அச்சமே காரணமென தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக காலதாமதிற்கு முன்னுதாரணமாக விளங்கும் ஜனாதிபதி சந்திரிகா தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமூக வளர்ச்சி மாநாட்டிற்கு, வழக்கம் போலவே காலதாமதமாக வரக்கூடும் என எதிர் பார்க்கப்பட்டது.

எனினும் இம் மாநாட்டில் மிக முக்கிய உரையாற்ற வேண்டிய ஜனாதிபதி சந்திரிகா இறுதிவரை வராமல் போனதற்கு புலிகள் மீது இவருக்கு இருந்த அச்சமே காரணமென 'ராய்ட்டர்' மற்றும் ஏ.எவ்.பி செய்தியாளர்கள் கூறுகின்றனர். சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–09–16**

சனி இரவு

8-02 தியாகி திலீபனின் 8ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி நல்லூர் ஈழதாசன் குழுவினர் தயாரித்து வழங்கும் ''தியாக தீபம்'' வில்லிசையின் 2ம் பகுதி
8-20 நேயர் கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 கலந்துரையாடுவோம் ''புகைப்பிடித்தல் பழக்கமும் அதனால் ஏற்படும் தாக்கமும்''

**1995–09–17**

ஞாயிறு காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 களத்தில் மலர்ந்தவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச்செய்திகள்
8-00 மணிவரை களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# தமிழர் பிரச்னையை தீர்க்காவிடில் பலருடன் யுத்தம் புரிய வேண்டி வரும்

(கொழும்பு)
சிறுபான்மைத் தமிழரின் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணாவிட்டால் மீண்டும் பல அமைப்புகளுடன் யுத்தம் செய்ய வேண்டிய நிலைமை தவிர்க்க முடியாது போய் விடுமென ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்; வட-கிழக்கு யுத்தத்தை வெற்றி கொள்வதற்கு படையினரினதும் அரசியல்வாதிகளினதும் ஒத்துழைப்பு தொடர்ந்து கிடைக்குமென நம்புகிறேன்.

இராணுவ நடவடிக்கையால் மட்டும் யுத்தத்தை வெற்றிகொள்ள முடியாது. ஆனால் இதனை முழுமையாக வெற்றி கொள்ள நாட்டின் முழுமையான வளங்களையும் அரசு பயன்படுத்தும் இந்த யுத்தம் மிகவும் கடினமான காரியமாக இருந்த போதும் இதனை வெற்றிகொள்ள முடியும்.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு 12 வருடகாலத்தில் தற்போது தான் முதன்முறையாக யுத்தம் தெளிவான திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுகிறது. குறைந்த சேதத்துடன் பெரிய வெற்றியை பெறவேண்டும் என்றார். சி

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டு விழா ஆலய பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

ஆலய பரிபாலன சபை நிர்வாகக் குழு உறுப்பினர் திரு க கிருபாகரன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் த. ந. பஞ்சாட்சரம் நிகழ்த்தினர். -க

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–09–16**

சனி மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 தியாக தீபம்
5-30 அறிவியல் வினாடி வினா
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 என் தெரிவு
6-10 செய்திகள்
6-15 பாமாலை

## பாடநூல்களில் தேவாரத் திருப்பதிகங்கள் முழுமையாக இடம்பெற வேண்டும்

[யாழ்ப்பாணம்]
சைவநெறிப் பாட நூல்களிலே, தற்போது தேவாரத் திருப்பதிகம் முழுமையாக இடம்பெறாமல் இருட்டடிப்புச் செய்யப்படுவதாக பல ஆதீனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

1978-ம் ஆண்டுக்கு முன்னர் திருக்கேதீசுவரம், திருக்கோணேசுவரம் முதலிய தேவாரத் திருப்பதிகங்கள் முழுமையாக பாட நூல்களிலே இடம் பெற்றன. 1978க்குப் பின்பு நடைமுறைக்கு வந்துள்ள சைவநெறிப் பாடநூல்களிலே எந்தவொரு திருப்பதிகமும் முழுமையாக இடம்பெறவில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் பேரினவாத அடிப்படையில் நடைபெறுவதால் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட சைவப் பெரியார்களும், சைவ நிறுவனங்களும் உடன் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்று மேற்படி ஆதீனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதுபற்றி மெய்கண்டதேவர் ஆதீனத்தின் முதல்வர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் ஓர் பிரசுரத்தை வெளியிட்டு சைவ நிறுவனங்களின் கவனத்தை ஈர்ந்துள்ளார்.

## 5கிலோவீதம்மா விநியோகம்

(யாழ்ப்பாணம்)
குடும்பத்திற்கு ஐந்து கிலோ வீதம் மீண்டும் 'அ' 'உ' அட்டைக்கு அடுத்த சுற்று மாவை விநியோகிப்பதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இம் மாவை எதிர்வரும் 23 திகதிக்கு முன்னர் விநியோகிக்குமுகமாக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் உடனடியாக உணவு உதவி சட்டுப் பாட்டு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு வழங்கற் கட்டளைகளை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரி திருமதி வி. கேதிஸ்வரன் தெரிவித்துள்ளார். 170-இ

## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் இடம்பெறவுள்ள தியாகி திலீபனின் 8-வது ஆண்டு நினைவு நாள் உண்ணாவிரத வைபவத்துக்கு இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு அனைத்து வர்த்தக ஊழியர்களும் கலந்துகொள்ளுமாறு யாழ். வணிக ஊழியர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# இராசி பலன்

**16–09–1995**

சனிக்கிழமை

[தமிழுக்கு ஆவணி–31]

ஸப்தமி பிற்பகல் 2. 29வரை, ரோகினி பி ப 3. 10 வரை, அமிர்த்த சித்தயோகம், இராகு காலம் காலை 9. 03 முதல் 10. 33 வரை, சுப வேளை மாலை 3. 03 முதல் 4. 33 வரை.

மேஷம்: கடினவாக்கு, தொழில் பகை, நம்பிக்கை குறைவு.

இடபம்: நண்பர் உதவி, பயண ஒழுங்கு, பணவரவு.

மிதுனம்: கௌரவக் குறைவு, குடும்பகவலை, அலைச்சல்.

கடகம்: எதிர்பாராத நன்மை, சயன சுகம், நற்பணி.

சிங்கம்: அதிகாரிகள் உதவி, சுபகாரியம், மனநிறைவு.

கன்னி: வைராக்கியம், கடன்பகை, வைத்தியசெலவு.

துலாம்: அமைதிக்குறைவு, வழிப்பயம், சகோதர வெறுப்பு.

விருச்சிகம்: முயற்சிபலிதம், புத்திரர் உதவி, சுப விரயம்.

தனுசு: பெற்றோர் சிந்தனை, தொழில் லாபம், உயர்ந்த ஸ்தானம்.

மகரம்: முட்டிமோதல், வயோதிபர் கோபம், அகால உணவு.

கும்பம்: மனச் சஞ்சலம், இனசனப்பகை, கடமை தவறுதல்.

மீனம்: வம்பளத்தல், கீழோர் நட்பு, தொழில் சிறப்பு.

— ஜோஸ்யர்

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]
தியாகி திலீபனின் 8-வது ஆண்டு நினைவாக யாழ் மாவட்ட ரீதியில் இன்று 16-ம் திகதி நடைபெறும் உண்ணாவிரதங்கள் பற்றிய விபரங்கள்:-

யாழ். வட்டம் - யாழ். வர்த்தகர் சங்கம், யாழ். இந்துக் கல்லூரி.

சண்டிலிப்பாய் வட்டம் - மானிப்பாய் வர்த்தக சங்கம், மானிப்பாய் ப. நோ. கூ. ச., மானிப்பாய் மக்கள்.

தீவகக் கோட்டம் (நல்லூர்) சாம்சன் குடியிருப்பு, சரவணை சின்னமடு ரே.க.த.க. பாடசாலை, காரைநகர் ப.நோ.கூ. சங்கம்.

தென்மராட்சி (கைதடி) - கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி விநாயகர் ச.ச. நிலையம், வளர்மதி ச ச. நிலையம், கைதடி மதி மாதர் சங்கம்.

(சாவகச்சேரி) சாவகச்சேரி வடக்கு - சங்கத்தானை மக்கள், (கொடிகாமம்) கரம்பகம் ச. ச நிலையம், சமுத்திரன் ச.ச. நிலையம், பராசக்தி ச ச. நிலையம், ஊர்காப்புக் கழகத்தினர் (பளை), தம்பகாமம் சிற்றூர் மக்கள், வானசங்கம்.

வடமராட்சி (உடுப்பிட்டி மூத்த விநாயகர் கோயில் மைதானம்) கண்ணகி, விநாயகர், சிவனடி, நாவலர் ச. ச. நிலையங்கள், பீக்கோன் கல்வி நிறுவனம், அச்சுவேலி சிற்றூர் மக்கள். வடமராட்சி (கரவெட்டி) வாடகை மோ. சை உரிமையாளர் சங்கம்.

### கல்லூரிகள்

தியாகி திலீபனின் 8-ம் ஆண்டு நினைவு தினத்தைமுன்னிட்டு கோட்ட மட்டத்தில் மாணவர் அமைப்பினால் உண்ணாவிரத நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்றையதினம் காலை 8-30 மணிக்கு கரவெட்டி உடுப்பிட்டியில் திருஇருதயக் கல்லூரி, உ. அ. மி. கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்வர்.

### நாகர் கோவிலில்

கடற்புலிகளின் யாழ் மாவட்டபிரதேசங்களில்வட்ட ரீதியாக தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆண்டு நினைவநாளை முன்னிட்டு நாகர் கோவிலில் உண்ணாவிரதம் ஏற்பாடாகியுள்ளது.

இன்று 16ம் திகதி காலை நாகர்கோவிலில் நடைபெறவுள்ள உண்ணாவிரத நிகழ்வில் மணற்காடு மக்களும், மணற்காடு விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வர்.

# பஸ்ஸில் புகை பிடித்ததால் 24 பயணிகள் உயிரிழந்தனர்

(லண்டன்)
பிறேசிலில் பயணிகள் பஸ் ஒன்று தீவிபத்துக்குள்ளாகியதில் அதில் சென்ற 24ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 13பேர்படுகாயமடைந்தனர்.

பிளாஸ்ரிக் கொள்கலனுக்குள் எரிபொருள் கொண்டு செல்லப்பட்டபோது அவ்வாகனத்துக்குள் புகைபிடித்துக் கொண்டிருந்த ஒருவருக்கு அருகில் அக்கொள்கலன் தீப்பிடித்து வெடித்தபோதே இத்தீ விபத்து ஏற்பட்டது.

இதனால் 24 பயணிகள் கருகிப் பலியானதுடன் பஸ்ஸும் முற்றாக எரிந்து போனது. ர-சி


# வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது வெளிவாரிப் பட்டம் பெற்று வெளியேறும் கலைத்துறை மாணவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இயக்குநர்
விரிவுரையாளர்கள்

## பட்டப்படிப்புகள் கல்லூரி

73, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.

[எ-5307[

**மணிவாக்கு**

இந்த உலகம் கோழைகளுக்கல்ல. ஓட முயலாதே; வெற்றியையோ தோல்வியையோ எதிர்பார்க்காதே.

- சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## அரச இயந்திர முடக்கம்

சிறிலங்காவில் உள்நாட்டு விமான சேவைகள் யாவும் நேற்று முன்தினமிருந்து நிறுத்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் சிறிலங்காவின் நாடாளுமன்றத்தை விமானம் மூலம் குண்டுவீசி தகர்க்க விடுதலைப்புலிகள் திட்டமிட்டுவருகிறார்களாம். அதனால் உள்நாட்டு போக்குவரத்து விமானங்கள் மற்றும் பயிற்சி விமானங்களின் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன.

இது ஆச்சரியப்படவேண்டிய விடயம் அல்ல. தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டிருக்கும் ஒடுக்குமுறை அதிகரிக்கஅதிகரிக்க அவர்களின் விடுதலைப்போராட்டமும் வேகமாகவளர்ச்சி அடைந்து வடபகுதியிலும் கிழக்கிலும் ஏன் சிறிலங்காவில் கூட அரச இயந்திரத்தை முடங்கச் செய்து கொண்டு வந்தது. இப்பவும் தொடர்ந்தும் முடங்கச் செய்யும் நடவடிக்கைகளில் அது ஈடுபட்டுள்ளது. இது எங்கள் நாட்டு விடுதலைப் போராட்டத்துக்கு மாத்திரம் விசேடமான அம்சம் அல்ல. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் நடந்த விடுதலைப் போராட்டங்களும் இவ்விதமே வெற்றி கண்டன.

சிறிலங்காவைப் பொறுத்த மட்டில் வடபகுதியில் முதலில் முடங்கவைக்கப்பட்ட அரச இயந்திரம் வங்கிகளே. அவை இயங்க முடியாத அளவுக்கு செயலிழக்கச் செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து பொலிஸாரும் பொலிஸ் நிலையங்களும் முடங்க வைக்கப்பட்டு பின்னர் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. இதனுடன் சேர்ந்த நடவடிக்கையாக நீதிமன்றங்கள் மூடப்பட்டன.

அடுத்த கட்டமாக இராணுவ முகாம்கள் விடுதலைப்புலிகளால் அழித்து ஒழிக்கப்பட்டன. கொக்காவில் மாங்குள முகாம்கள் ஒழிக்கப்பட்டன. ஏனையவை பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசே அவற்றை மூடிவிட்டது. இராணுவத்தின் தரைவழி நடமாட்டம் வவுனியாவுடன் நிறுத்தி வைக்கப்பட்டது.

யுத்தித்தினால் ஏற்பட்ட கெடுபிடிகளும் மக்களின் போக்குவரத்துக் கஷ்டமும் கிளாலிப்பாதைத் திறப்பும் அப்போது சந்தித்த அபாயங்கள் அட்டூழியங்கள் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது. அவர்களின் வளர்ச்சி கிளாலிப் பயணத்தில் ஏற்பட்ட அழிவுகளை இல்லாமல் செய்தது.

கடற்புலிகளின் வீரதீரப் போராட்டத்தினால் சிறிலங்காவின் கடற்படையினரின் நடமாட்டம் படிப்படியாக குறைக்கப்பட்டது. தாய்க்கப்பல்கள், டோறாக்கள் போன்றவை அழிக்கப்பட்டமை கடற்படையினரின் வாட்டர் ஜெற் படகுகள் பல கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டமை, ஐரிஸ் மோனா அவர்களால் கடத்தப்பட்டமை எல்லாமாகச் சேர்ந்து கடற்படையினரின் நடமாட்டத்தை ஓரளவுக்கு முற்றாக தடைசெய்துள்ளது.

இதேநேரத்தில் விமான எதிர்ப்புப்படை உருவாக்கத்துடன் சிறிலங்கா விமானப்படைக்கு சவால்விடப்பட்டது. இரு அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நவாலியில் அப்பாவித்தமிழ் மக்கள் மீது அநாவசியமாக குண்டுகளை வீசி கொடூரக் கொலைகளைப் புரிந்த புக்காராவும் சுட்டு வீழ்த்தப்பட்டது. இது விமானப்படையினரின் வான் வழிப்பயணத்தை பெருமளவு மட்டுப்படுத்தியது. சமீபத்தில் பலாலி நோக்கி பல இராணுவத் திட்டங்களுடன் வந்த புதிய ரஷ்யத் தயாரிப்பு அன்ரனோவ் விமானம் நீர்கொழும்புப் பகுதியில் வெடித்துச் சிதறியது. இதனால் விமானப் படையினரின் வான்வழிப் பயணங்கள் ஓரளவுக்கு முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

வடபகுதியில் விடுதலைப்புலிகளின் விடுதலைப் போராட்டம் எவ்விதம் சிறிலங்காவின் அரச இயந்திரத்தை படிப்படியாக முடங்க வைத்ததோ, படைகளின் நடமாட்டத்தை முடங்க வைத்ததோ அவ்வித நிலை இப்போது கிழக்கில் தோன்றியுள்ளது. சிறு படை முகாம்கள் பெரிய முகாம்களுடன் ஒன்றிணைக்கப்படுகின்றன. பெரிய முகாம்கள் முற்றாக அகற்றப்படுகின்றன. இடம்பெயர்ந்து வாழ்ந்த பொது மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர். கிழக்கில் அரசு விமான எதிர்ப்பு தாக்குதலுக்குப் பயந்து தனது விமானங்களை 5000 கிலோ மீற்றர் தொலைக்கு மேல் பறக்கும்படி கட்டளை பிறப்பித்துள்ளது.

ஒட்டு மொத்தத்தில் விடுதலைப் போராட்டத்தின் முனைப்பு தரை வழி, கடல்வழி, ஆகாய வழித் தடைகளை அரசுக்கும் இராணுவத்திற்கும் ஏற்படுத்தி அவர்களின் செயற்பாடுகளை முடங்க வைத்துள்ளது மாத்திரமல்லாமல் தென் இலங்கையிலும் இயல்பு நிலைமைகளையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

# தீர்வு என்பது வெறும் கண்துடைப்பு

## யுத்தத்தை தொடர்வதே அரசின் நோக்கம்

(கொழும்பு)

அரசு யுத்தத்தை தொடர்ந்தும் நடாத்தவே திட்டமிடுகிறது. அரசியல் தீர்வு என்பது வெறும் கண்துடைப்பாகவே உள்ளது, என 'ஜனதா மித்ரோ' என்ற சிங்கள அமைப்பு கூறியுள்ளது.

இதுபற்றி அவ் அமைப்பு மேலும் கூறுகையில்; இனப்பிரச்சினைக்கு அரசு அரசியல் தீர்வை முன்வைப்பதாக கூறி வருவதை எதிர்க்கிறோம். தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உண்மையான அக்கறையில்லாமல் மேற்குலக நாடுகளை திருப்தி செய்வதே அரசின் நோக்கம்.

அரசு யுத்தத்தை தொடர்ந்தும் நடாத்தவே முனைந்து வருகிறது. அரசியல் தீர்வு என்பது மேற்குலக நாடுகளைக் கவருவதற்கான வெறும் கண்துடைப்பு நாடகம்.

அரசியல் தீர்வின் நகல் அறிக்கை என்ற பெயரில் மேற்கு நாட்டு தூதரகங்களுக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது எனினும் இது பற்றி தமிழ் மக்களுக்கோ அல்லது சிங்கள மக்களுக்கோ தெரியாது எனவும் கூறியுள்ளது. -ஜ

# கடந்த 4 மாதத்தில் ஏறாவூரில் 60 பேர் பலி

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் கடந்த நான்கு மாதங்களில் 60 பொதுமக்கள் பலியாகியுள்ளனர்.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த கடந்த நான்கு மாதங்களிலேயே இராணுவ நடவடிக்கையால் ஏறாவூர் பொலிஸ் பகுதியில் 60 பொது மக்கள் பலியாகியுள்ளதாக மரண விசாரணை அறிக்கை தெரிவித்துள்ளது.

இதேவேளை இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் சுமார் இருநூற்றிஐம்பது பேர் வரை படுகாயமடைந்துள்ளதுடன் 20 பேர் வரை காணாமல் போய் விட்டதாகவும் புள்ளி விபரமொன்று தெரிவித்துள்ளது. -சி

### இன்று

(நெல்லியடி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 16-ம் திகதி காலை 9-30 மணிக்கு தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் திரு. வி. சேதுநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. -160

# அன்ரனோவ் விமான விபத்தால் படையினர் மத்தியில் குழப்பம்

(கொழும்பு)

இராணுவத்தினரையும் இராணுவ உபகரணங்களையும் ஏற்றிவந்த இராணுவ விமானம் கந்தானை கடலில் விழுந்து நொருங்கியதனை அடுத்து, படையினரிடையே பலத்த தடுமாற்றமும் குழப்ப நிலையும் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த விமானம் நடுவானில் நொருங்கியதற்கு சதி, நாசவேலையெனக் கூறுவோர் ஒருபுறம், காலநிலை சரியில்லையெனக் கூறுவோர் மறுபுறம், ஏவுகணை தாக்குதலே காரணம் என்ற கருத்து மற்றொரு புறமாக குழப்பமான கருத்துக்கள் நிலவுகின்றன.

விமானத்தில் சிகரட் பெட்டியுள் இருந்த குண்டு வெடித்திருக்கலாம் என்று கருதப்பட்டு, இந்த சிகரட்டுகளை வேண்டிய இடம், வேண்டியவர் எல்லாம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை உடனடியாக இதனை சதி நாசவேலையென்று தீர்க்கமானமுடிவெடுக்க படையினர் தயங்குவதாக பி. பி. ஸி. செய்தி முகவர் தெரிவித்துள்ளார். ஏனெனில் சதியென்று நிரூபிக்கப்படின் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு துருப்புகள், இராணுவ தளபாடங்கள், உணவு மற்றும் மருந்துகள் ஏற்றிச் செல்லும் பணி வெகுவாக பாதிப்புறும். அத்துடன் யாழ்குடாவில் இராணுவம் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளும்போது காயப்பட்டோரை கொழும்பு கொண்டு வருதலும் பாதிப்புறும்.

தொழில் நுட்பக் கோளாறு என்றாலும் அதுவும் சிக்கல் நிலைதான். ஏனெனில் புதிதாக தருவிக்கப்பட்ட இந்த ரக விமானங்களையே நம்பி யாழ்குடாவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தையும் தாமதமடையச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

பலாலியில் முன்னர் புலிகளால் அவ்ரோ விமானம் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதும் தொழில்நுட்ப கோளாறென்று முதலில் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 2-வது விமானமும் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அவை ஏவுகணை தாக்குதல்களால் சுடப்பட்டதாக விமானப் படை அதிகாரிகள் கூறினர் என்றும் பி பி ஸி யின் செய்தி முகவர் கூறியுள்ளார். கே-சி

## கொட்டுங்கள் தமிழரே முரசினை ஒன்றாய் !

பொறிகக்கும் விழியோடு புலியாகி நின்றான்  
பொலிவான உணர்வோடு போராடி வென்றான்  
நெறிகெட்ட கொடியர்முன் நீதி கேட்டிருந்தான்  
— திலீபன்  
நெடிய தீ வேள்வியில் தன்னையே சொரிந்தான்

நல்லூரில் புலிமகன் பூவாக மலர்ந்தான்  
நற்றமிழ் அன்னையின் மடியிலே விழுந்தான்  
பொல்லாத வடயிந்திப் புலையர் செய் தீங்கினால்  
— திலீபன்  
பொசுங்கினன் ஆயினும், புவியிடை ஓங்கினன்

''அரும்மான பொழுதிலே கொடியினை இழந்தான்''  
அருந்தமிழ் ஈழமே அன்னையென் றெழுந்தான்  
துரும்பாகு முயிர், மானம் பெரிதென மொழிந்தான்  
— திலீபன்  
தூயமா வீரனெம் மனமெலாம் நிறைந்தான்

உண்ணாத நோன்பிலே உறுதியோ டிருந்தான்  
உத்தமராம் காந்தியையும் அறப்போரில் வென்றான்  
அண்ணனின் தம்பியாய்க் காவியம் படைத்தான்  
— திலீபன்  
ஆதிக்க வெறியரின் முகத்திரை கிழித்தான்

தண்ணீரும் அருந்தாது தளிரவன் எரிந்தான்  
தமிழினம் உயிர்த்தெழ யாகமே புரிந்தான்  
புண்ணான மனத்தரோ புரிந்திட மறுத்தார் — கரிய  
பொய்யினுள் மெய்மையைப் புதைத்திட நினைத்தார்

எட்டென்ன எண்ணூறு ஆண்டுகள் போகும்  
ஏந்தல் செய் ஈகத்தின் சுடர் என்றும் வாழும்  
கொட்டுங்கள் தமிழரே முரசினை ஒன்றாய் — திலீபன்  
கொண்டதோர் பசி, தாகம் முடிப்பமே நன்றாய்.

— நிலா தமிழின்தாசன்

# மணக்கொடைத் தடைச் சட்டம் மகளிருக்கோர் வரப்பிரசாதம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி, நிர்வாகத்துறையினரால், 01-09-95 முதல் செயற்படும்படியாக அமுலாக்கப்பட்டுள்ள 'மணக்கொடைத் தடைச் சட்டம்', மகளிர் குலத்துக்கோர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. இச்சட்டத்தின் அவசியத்தை நன்குணர்ந்து, துரித கதியில் அதனைத் தயாரித்து உடனடியாகச் செயற்பாட்டிற்குக் கொண்டுவந்த எங்கள் அரும்பெரும் தலைவர் அவர்களை மகளிர் குலம் ஒருபோதும் மறக்காது.

மிக வேகமாக வளர்ச்சி அடைந்து எதிரியையும் ஏன் உலகையுமே கலக்கிக்கொண்டிருக்கும் எமது விடுதலைப் போராட்டத்தில், மகளிரின் சக்தியையும், முக்கிய பங்கையும் உய்த்துணர்ந்து, அவர்களின் ஆற்றலை ஒன்றிணைத்து உலகமே வியக்கத்தக்க முறையில் மகளிர் படையணி மூலம் சாதனைகளைக் குவித்துக்கொண்டிருக்கும் தேசியத் தலைவர் அவர்கள், மகளிரின் வீரச் செயல்களுக்கும், துணிச்சலுக்கும் ஒரு பரிசாக இந்த 'மணக்கொடை தடைச் சட்டத்'தைக் கையளித்துள்ளார் என்று கூறுவது சாலவும் பொருத்தமானதே.

சீதனத்தின் பெயரால் ஆண்மையை ஏலத்தில் விலை பேசிய சமுதாயம் இன்று ஒழிக்கப்பட்டுள்ளது. சீதனக் கொடுமையினால் காலங்காலமாக முப்படையும்வரை வாளாவெட்டியாக வேதனையுடன் காலம் கழித்த மகளிருக்கு ஒரு விடிவு பிறந்துள்ளது.

## இச்சட்டத்தினால் மகளிருக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள்

1. இச்சட்டத்தின் மூலம் தரகர் முறை ஒழிக்கப்பட்டுள்ளமையால் மணமகன், மணமகள் வீட்டார் ஏமாற்றப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

2. எதிர்காலத்தில் திருமண ஒழுங்குகள் மணமக்களின் பெற்றோர்களினால் அல்லது உறவினர்களினால் அல்லது சமூக சேவையாளர்களினால் மேற்கொள்ளப்படுவதற்குரிய வாய்ப்புகள் தோன்றி உள்ளன.

3. கடந்த காலங்களில் மணக்கொடை (சீதனம்) கொடுத்துத் திருமணம் செய்த பின்பும் ஆண்களால் வஞ்சிக்கப்பட்டது போன்ற நிலை இனி எழமாட்டாது.

4. மணமகளுக்குப் பெற்றோரால் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும் நன்கொடைகள் (காணி, வீடு, பணம், பொருள்) பெண்ணின் உரிமைச் சொத்துக்களாக எழுதப்பட உள்ளமையால் பெண்ணின் பலம் உயர்வது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஆண்கள் உண்மையான அன்புடன் அன்னியோன்னியமாக வாழ்வதன் மூலமே தமது மனைவியரின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெறமுடியும்.

5 நன்கொடைகள் யாவும் மணமகளின் பெயரில் எழுதப்பட்டுள்ளவேளையில், ஆண்கள் தமது பனைவியரை வெருட்டி, துன்புறுத்தி, வற்புறுத்தி அந்த நன்கொடைகளை அபகரிக்க முயல்வதும் தடுக்கப்பட்டுள்ளது.

6. இச்சட்டத்தினால் சமுதாயத்தில், இல்லங்களில், பிள்ளைகளின் முன்னிலையில் பெண்களின் அந்தஸ்து கௌரவம், மதிப்பு என்பன பன்மடங்கு அதிகரித்துள்ளன.

7. நாட்டைக் காக்கும் மகளிர் குலம் உரிமையுடனும், கௌரவத்துடனும் வீட்டைக் காக்கும் யுகம் தோன்றியுள்ளது.

8. எதிர்காலத்தில் மணக்கொடை (சீதனம்) பெறுவதும் கொடுப்பதும் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டுள்ளபடியால், திருமணம் செய்த பின் சீதனப் பிரச்சனையால் சீர்குலைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படமாட்டாது.

9. காதலினால் ஒன்றிணையும் இரு உள்ளங்கள் சீதனப் பிரச்சனையால் சிதைந்து போகும்நிலை ஏற்படமாட்டாது.

10. திருமணத்தின் பின் கணவன் அல்லது பெற்றோர் அல்லது சகோதரங்கள் மணக்கொடை பெறும் நோக்கில், வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ மணப்பெண்ணை தன் புறுத்துவது சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ளது.

ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமானமாக யுத்த களத்தில் நின்று போராடுவதன் மூலம் மலர்ந்துகொண்டிருக்கும் தமிழீழத்தில், மகளிர் தமது இல்லற வாழ்க்கையில் ஆனந்தமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு வழி வகுத்துள்ள தேசியத் தலைவரைத் தந்து வரலாற்று நாயகனாக்கிய பேரிறைக்கு, கரம் கூப்பி நன்றி கூறுவோம்.

**- மாரீசன் -**

---

அமெரிக்காவிலும் - லண்டனிலும்

# வெற்றி வாய்ப்பை கோட்டைவிட்ட முதல்தர வீரர்களின் சோகம்!

உலக டென்னிஸ் அரங்கில் இன்று முதல்தர ஆட்டக்காரராகக் கணிக்கப்படும் அமெரிக்க வீரர் அந்தரே அகஸி அண்மையில் லண்டனிலும், அமெரிக்காவிலும் நடைபெற்ற பிரசித்திபெற்ற டென்னிஸ் ஆட்டங்களில் அடுத்தடுத்து தோல்வியைத் தழுவியது ரசிகர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

லண்டனில் நடைபெற்ற 'விம்பிள்டன்' டென்னிஸ் போட்டியிலும், அமெரிக்க "ஓப்பின்டெனிஸ்" போட்டியிலும், இன்று உலகில் 2ம் இடத்தை வகிக்கும் அமெரிக்க வீரரான பீற்சம்பிராஸ், அமோக வெற்றி பெற்று கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று தான், மேற்படி இரு போட்டிகளிலும் இன்று பெண்கள் பிரிவில் முதல் இடத்தை வகிக்கும் ஜெர்மன் வீராங்கனை ஸ்ரெபி கிருப் வெற்றி பெற்றுள்ளார்.

அமெரிக்க டெனிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் முதல்தர ஆட்டக்காரரான அந்ரே அகஸியும் 2ம் இடத்தை வகிக்கும் பீற்சம்பிரஸும் போட்டியிட்டார்கள். சம்பிரஸ் இப்போட்டியில் இதற்கு முன்பு இரு தடவைகள் வெற்றிபெற்றவர். அகஸி ஒரு தடவை வெற்றி பெற்றவர்.

அமெரிக்காவினால் நடாத்தப்படும் இந்த சர்வதேச போட்டியின் இறுதி ஆட்டத்தில் இம்முறை அமெரிக்கர் இருவரும் போட்டியிட்டதினால் அரங்கில் கூடியிருந்த 25 ஆயிரம் ரசிகர்கள் மத்தியில் ஆட்டம்தொடங்கி முடிவடையும் வரை பலத்த கரகோஷம் எழுந்தவண்ணமே இருந்தது.

உலகில் ஆண்கள் டெனிஸ் பிரிவில் முதலாவது இடத்தை வகிக்கும் அந்ரே அகஸி இப்போட்டியின் இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்படுவாரா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருந்தது. ஏனென்றால் விம்பிள்டன்டெனிஸ் போட்டியின் கால் இறுதி ஆட்டத்தில் இவர் ஜெர்மன் வீரர் பொரிஸ் பேக்கரிடம் தோல்விஅடைந்தது அனைவருக்கும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இதே பொரிஸ் பேக்கர் தான் இப்போட்டியிலும் அரை இறுதி ஆட்டத்தில் அந்ரே அகஸியுடன் விளையாடத் தகுதி பெற்றார். ஆனால் இம்முறை அகாஸி பொரிஸ் பேக்கரை வெற்றி பெற்று இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றார்.

இரு அமெரிக்கர்களினதும் இறுதியாட்டம் சுமார் $3\frac{1}{2}$மணித்தியாலங்களுக்கு நீடித்தது குறிப்பிடத்தக்கது. இருவரும் ஒருவருக்கொருவர் சளைக்காது விளையாடிய போதிலும் ஈற்றில் சம்பிராஸ் 6-4, 6-3, 4-6, 7-5 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

**— தேவா —**

## மொனிக்கா செலஸ்

பெண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஜெர்மன் வீராங்கனை ஸ்ரெபி கிருப்பும் ஸ்பெயின் வீராங்கனை மொனிக்கா செலஸும் மோதினார்கள். கடந்த இரு வருடங்களுக்கு முன்பு ஜெர்மனியில் நடைபெற்ற ஒரு போட்டியில் மேற்படி இருவரும் மோதியபோது தான், மொனிக்கா செலஸ் பார்வையாளன் ஒருவனின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்தார். இதனால் கடந்த இரு வருடங்களாக டெனிஸ் ஆட்டத்தில் இருந்து இவர் ஒதுங்கியிருந்தார்.

கடந்த ஒரு மாதங்களுக்கு முன்புதான் மீண்டும் டெனிஸ் உலகில் பிரவேசித்தமொனிக்க செலஸ் அண்மையில் கனடாவில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு வெற்றியும் பெற்றார். கனடாப் போட்டியில் ஸ்ரெபி கிருப் பங்குபற்றவில்லை.

ஆனால், அமெரிக்கப் போட்டியில் இவ்இருவரும் கலந்து கொண்டு ஆரம்பப் போட்டிகளில் மிக இலகுவாக வெற்றிகளையும் பெற்றனர். இறுதி ஆட்டத்துக்கு இவ் இருவரும் தெரிவு செய்யப்பட்டபோது, இதில் யார் வெற்றிபெறுவார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது இருந்தது.

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை மொனிக்கா செலஸ் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராகவே காணப்பட்டார், மின்னல் வேகத்திலேயே பந்துகளை மறுமுனைக்கு அனுப்பிய வண்ணம் இருந்தார். எதிர் முனையில் எதிர்த்து நின்று ஆடிய அனுபவசாலியான ஸ்ரெபி கிருப், மிகசாதுர்யமாக தடுத்து ஆடியதுடன் புள்ளிகளை பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

முதல் ஆட்டத்தில் ஸ்ரெபி கிருப் 7-6 என்ற புள்ளி வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இந்த ஆட்டம் மட்டும் சுமார் 50 நிமிடங்கள் நடைபெற்றன 2-வது ஆட்டத்தில் மொனிக்கா செலஸ் 6-0 என்ற புள்ளிகள் வித்தியாசத்தால் மிக இலகுவாக வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தில் ஸ்ரெபி கிருப் மிகவும் களைப்புற்றவராகக் காணப்பட்டதினால் மூன்றாவது சுற்றில் மொனிக்கா செலஸ் இலகுவாக வெற்றிபெற்று விடுவார் என பெரும்பாலானோர் எதிர்பார்த்தனர்.

இப்போட்டியில் தான் எப்படியும் வெற்றிபெற்றுவிட வேண்டும் என்ற மொனிக்கா செலஸின் அவசரத்தை நன்கு தெரிந்து கொண்ட ஸ்ரெபி கிருப். அவரின் அவசரத்தையும், வேகத்தையும் அதிகரிக்கக்கூடிய விதமாக மிக சாதுரியமாக விளையாடி உண்மையிலேயே மொனிக்கா செலஸைக் களைப்படையச் செய்துவிட்டு 3-வது ஆட்டத்தில் 7-5 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றியும் பெற்றார்.

---

# பாலியல் வன்முறைக்கு மகளிர் மாநாட்டில் எதிர்ப்பு

(பீஜ்ஜிங்)

பீஜ்ஜிங்கில் நடக்கும் உலக மகளிர் மாநாட்டில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கு எதிராக கண்டனம் எழுப்பபபட்டுள்ளது.

வறுமை, பெற்றோர்களின் புறக்கணிப்பு மற்றும் அறியாமை காரணமாக இளம் பிள்ளைகளை விபசாரத்தில் ஈடுபடுத்துவது ஒரு தொழிலாகவே மாறிவருவதை இம் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதுபோன்ற மனித உரிமைகள் மீறல் உலக நாடுகளின் பல இடங்களிலும் நடப்பதை ஒழித்து இளம் பிள்ளைகளின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும் எனவும் இம் மாநாட்டில் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. -ர-சி

---

# 'எய்ட்ஸ்' நோயை 10 விநாடியில் கண்டறியலாம்

(புதுடில்லி)

'எய்ட்ஸ்' நோய்த் தாக்கத்தைப் பத்து விநாடிகளில் கண்டறியக்கூடிய புதிய இரத்தச் சோதனை முறை ஒன்று இந்தியாவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

டில்லி பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானியான விஜய் சௌத்திரி என்பவரே இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

இதன் மூலம் ஒருவருக்கு 'எய்ட்ஸ்' நோய் உள்ளதா என்பது அவரது இரத்தச் சோதனையை மேற்கொண்டு பத்து விநாடிகளில் கண்டறிய முடியும்

இன்னும் ஓராண்டில் இந்த பரிசோதனை முறை மிகவும் பிரபல்யமாகும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. -சி

---

# சோதிட பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் பயிலரங்கும் ஆய்வரங்கும் நல்லூர் ஞானோதயா வித்தியாலய மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

பயிலரங்கில் உயர்தர நட்சத்திர சோதிடக் குறிப்பு எழுதும் முறைபற்றி திரு. ஐ. வைத்தியநாதரால் அறிமுகப்படுத்தப்படும். திரு. பி. செல்லத்துரையினால் 'கிருஷ்ணமூர்த்தி பத்ததியில் குறிகாட்டிகள்' என்னும் விடயம் பற்றிய ஆய்வுரை நடாத்தப்படும். -சி

---

நெல் விளையும் மீன் பாயும் –
இங்கே நம்மவர்கள் வயிறு ஏன் காயும்?

# இன்று யாழ். பல்கலைக்கழகத்தின் 15-வது பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் 15-வது பட்டமளிப்பு விழா இன்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் மூன்று அமர்வுகளாக நடைபெறும். காலை 9 மணிக்கு வேந்தர், துணைவேந்தர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர், மாணவ மாணவிகள் ஆகியோரின் அணிவகுப்பு ஊர்வலத்துடன் முதல் அமர்வு ஆரம்பமாகும்.

இம்முறை ஆயிரத்து அறுபதெட்டு மாணவருக்கு பட்டங்கள் வழங்கப்படுகின்றன. முதல் அமர்வில் 215 மாணவர்களும், இரண்டாவது அமர்வில் 255 மாணவர்களும், மூன்றாவது அமர்வில் 272 மாணவர்களும் நேரில் தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்வர்.

முதன் முறையாக கலைமாணி (வெளிவாரி)யில் பட்டத்தைப் பெறும் 178 மாணவர்களுடைய பெயர் விழாவிலன்று வாசிக்கப்படும். ஆனால் நேரில் பட்டம் வழங்கப்படமாட்டாது.

முதலாம் அமர்வில் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் அவர்களுக்கு விஞ்ஞான கலாநிதி என்னும் கௌரவப்பட்டமும், மூன்றாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழக விவசாயத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் காலஞ்சென்ற சோ. கந்தையா அவர்களுக்கு விஞ்ஞான கலாநிதி எனும் கௌரவப் பட்டம் தேகாந்த நிலையில் வழங்கப்படும். 162-சி

# அமெரிக்கத் தூதரகம் ரஷ்யாவில் தாக்கப்பட்டது

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு நேற்று முன்தினம் ஆர். பி ஜி ரொக்கட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த தூதரகத்திற்கு முன்னால் சென்று கொண்டிருந்த வாகனமொன்றிலிருந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக ரஷ்ய பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தினால் அமெரிக்க தூதரக கட்டிடம் சேதமடைந்தது.

பொஸ்னியாவில் பொஸ்னிய சேர்பியர்களுக்கு எதிராக நேட்டோ விமானங்கள் குண்டு வீசி தாக்குவதற்கு அமெரிக்கா ஆதரவு அளித்துவருவதனை எதிர்த்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து மொஸ்கோவிலுள்ள அமெ. தூதரகத்திற்கும் தூதரக அதிகாரிகளுக்கும் பலத்த பாதுகாப்பை மொஸ்கோ பொலிசார் வழங்கியுள்ளனர். கே-சி

# அற்புதமான வீரம்செறிந்த போராட்டத்தை நடாத்துகிறோம்

## - நடேசன் உரை

(நெல்லியடி)

'ஸ்ரீலங்கா அரசைப்போல் நாம் யாரிடமும் கை ஏந்தி கடன் வாங்கி அடிமைப்படாமல், தமிழீழ மண்ணில் எம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவே, தமிழீழ வைப்பகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது'

இவ்வாறு, நெல்லியடியில் தமிழீழத்தின் மூன்றாவது வைப்பகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் குறிப்பிட்டார்.

வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு செழியன் தலைமையில் நடைபெற்ற இவ் வைப்பகத் திறப்பு விழாவில் திரு. நடேசன் தொடர்ந்து பேசுகையில்;

எமது போராட்டமானது எம் மக்களின் தாயக விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்த வளர்ச்சி தற்போது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை மக்களும், உலக நாடுகளும் அறிந்துள்ளனர்.

எமது போராட்டம் வெறுமனே சிங்கள இராணுவத்துக்கு எதிரான போராட்டமல்ல, பல்வேறு திசைகளிலும் பல இலக்குகளை நோக்கி ஏற்படுத்தப்பட்ட போராட்டம். ஒரு புறம் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராகவும் மறுபுறம் சிங்கள இராணுவத்திற்கு உதவும் சர்வதேசத்திற்கு எதிரான போராட்டமுமாகும்.

உலகில் ஏனைய விடுதலைப் போராட்டங்களை நடாத்துவதிலும் பார்க்க நாம் அற்புதமான வீரம் செறிந்த போராட்டத்தை நடாத்துகின்றோம். எமது போராட்டத்தைப் பின்பற்றி எம்மைப் போல் போராடி விடுதலை பெற சர்வதேச கிளைகளில் பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் ஆலோசனை பெறுகிறார்கள்.

அரச இயந்திரத்தின் அடித்தளமான நிதித்துறை, பொருண்மியம், காவல்துறை, அரசியல்துறை, படைத்துறை போன்ற கட்டுமாணங்களை உருவாக்கி தனி அரசை உருவாக்கும் அளவுக்கு நாம் வளர்ச்சியடைந்துள்ளோம்.

வைப்பகத்தின் இலட்சியம் என்ன; அதுஏன் உருவாக்கப்பட்டது என்பதை நீங்கள் உணரவேண்டும். ஸ்ரீலங்கா அரசு உலக நாடுகளில் கடன் பெற்று திருப்பிக்கொடுக்க முடியாது பொருளாதார நிலையில் கீழ் நோக்கித் தள்ளப்பட்டுள்ளது.

சர்வதேசப் போராட்டத்தை ஒப்பிடும்போது எவ்வளவு தூரம் எமது போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளது. ஏனைய நாட்டுப் போராட்டத்தில் மக்களின் சமூக அடித்தளத்தை ஏற்படுத்தாது வேறு விதமாக நடாத்தி மக்களை பட்டினிச் சாவில் இட்டனர். தலைவர் பிரபாகரன், சமூக வாழ்க்கையில் நீண்ட தூரநோக்கில் பல அமைப்புகளை உருவாக்கி, எதிரியின் கொடிய அடக்குமுறையின் மத்தியிலும் எதிரியின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை அடக்கு முறை மத்தியிலும், எம் மக்களைபாதுகாத்து வருகின்றார் என்றார்.

கடற் புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை பேசுகையில்; உலக நாடுகள் குறிப்பாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் சுமார் 4850 கோடி ரூபாவை ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கியிருந்தன. ஆனால் அந்த நிதி அபிவிருத்தி என்னும் போர்வையில் யுத்தத்துக்குப் பாவிக்கப்பட்டது. இது போதாதென்று இவ் ஆண்டு யுத்தத்திற்கென 3156 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இன்று நாளாந்தம் காலத்துக்குக்காலம் ஏற்படும் சூழ்நிலைக்கேற்ப 500 கோடி ரூபாவை சண்டைக்கு ஒதுக்குகிறார்கள். இப் பணம் அரசினால் வங்கிகளில் கடனாகவும் நிதியாகவும் வெண்தாமரை என்னும் அமைப்பின் மூலம் தென்பகுதி மக்களிடம் கடனாகப் பெறுகிறார்கள்.

நாம் பெருமளவு நிதியை அரசு வங்கிகளில் வைப்பிலிடுகிறோம். இதை எம் மக்களுக்கு எதிராக எதிரி பயன்படுத்துகிறான். கடனாக வங்கியிலிருந்து பெறப்படும் இப் பணத்தை எதிரி எமக்கு எதிராக திருப்புகிறான். இதனால் எமக்கென தமிழீழ மண்ணில் வைப்பகங்களை உருவாக்குகிறோம் என்றார். 160-சி

## மட்டக்களப்பில்

(1ம் பக்க தொடர்ச்சி)

மட்டக்களப்பு 19ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து 36ம் கொலனி இராணுவ முகாமை நோக்கி ரோந்து சென்ற 20 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதலில் 15ற்கும் மேற்பட்ட படையினர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். ஏனையோர் இழப்புகளுடன் தப்பியோடிவிட்டனர்.

நேற்றுக்காலை 7-25 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் 10 நிமிடம் வரையே இடம்பெற்றது.

இதேவேளை 19ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து 'பவள்' சகிதம் உதவிக்கு வந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகளின் மற்றோர் அணியினர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் பவள் கவச வாகனம் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் இராணுவத்தினர் இழப்புகளுடன் பின் வாங்கிச் சென்றதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கரி

## மரணம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை வலிகாமம் பகுதிகளை நோக்கி மேற்கொண்ட ஷெல்லுக்கு இலக்காகி காயப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவர் மரணமானார்.

புன்னாலைக்கட்டுவனைசேர்ந்த வைத்திலிங்கம் தம்பிராசா (வயது 74) என்பவரே மரணமானார். இந்த ஷெல் தாக்குதலில் 13பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் 170-சி

## பரீட்சகர்விபரம் மீளாய்வு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சா/த) பரீட்சைக்கான விடைத்தாள் பரீட்சகர் தொடர்பான விபரங்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார்.

தகைமையுடைய ஆசிரியர்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும், வலயக் கல்வி அலுவலகங்களிலும் இருக்கும் மாதிரிப் படிவத்தில் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பிக்கும்படி கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். ரி

# ★ இந்துக்களுக்கு எதிரான அரசின் அநீதிகளை வெளியுலகிற்கு எடுத்துக் கூறியவர் 'ஆத்மஜோதி'

(யாழ்ப்பாணம்)

"இந்துக்களுக்கு எதிராக மேற்கொள்ளும் இலங்கை அரசின் அநீதிகளை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லப் பயணம் செய்தவேளையில், ஆத்மஜோதி ஐயா அமரரான செய்தி எம் உள்ளத்தை உருக்குகின்றது. இந்நாட்டில் நடைபெறும் யுத்தத்தால் இந்து ஆலயங்கள் திட்டமிட்டுத் தாக்கப்படுவதையும், இந்துக்கள் துன்புறுத்தப்படுவதையும் ஸ்தாபனரீதியாக எதிர்க்க வேண்டும் என்ற நோக்கில் இந்து சமயப் பேரவை எனும் இந்துக்களின் கூட்டமைப்பை நிறுவி அதற்குத் தலைமை தாங்கிய பெருமை ஆத்மஜோதியையே சாரும்."

இவ்வாறு அண்மையில் கனடாவில் அமரரான இந்து சமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நல்லை ஆதீனக் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் குறிப்பிட்டார்.

இவ்வஞ்சலிக் கூட்டம் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இந்து சமயப் பேரவைப் பதில் தலைவர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது தொடர்ந்து பேசிய சுவாமிகள் கூறியதாவது: போரைச் சாட்டாக வைத்துக்கொண்டு இந்நாட்டில் இந்துக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு மேற்கொள்ளும் அரசின் அநீதிகளை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கில் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி முத்தையா வெளிநாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டவேளையில் கனடாவில் அமரரான செய்தி எமது உள்ளங்களை உருக்குகின்றது.

இந்நாட்டில் இருந்து யுத்தம் காரணமாக வெளியேறும் மக்கள் எமது மொழி, மத, கலாசாரங்களை மறந்துவிடாது வாழவேண்டும் என்பதை அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும்போது அங்கு வாழும் எமது மக்களுக்கு வலியுறுத்தி எடுத்துகூறி வந்தார். வெளிநாட்டில் உள்ள எம்மவர் பலர், வேற்று மொழிகளைத் தமது மொழியாகக் கொண்டுள்ளனர். சிலர் அங்கு தமிழில் பேசினால் தமிழை விளங்குகின்றார்கள். ஆனால் தமிழில் பதில் சொல்ல முடியாதவர்களாக உள்ளனர். இவர்கள் ஊமைத் தமிழர்கள். சிலர் தமிழில் பேசினால் தமிழை விளங்கவும்மாட்டார்கள். கேட்கவும்மாட்டார்கள். இவர்கள் செவிட்டுத் தமிழர்கள். இப்படிச் செவிட்டுத் தமிழராகவும், ஊமைத் தமிழராகவும் தமிழன் மாறுவதை நாம் அனுமதிக்கக்கூடாது என்று ஆத்மஜோதி உணர்ச்சி ததும்பக் கூறுவார். தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவவேண்டும் என்பதே ஆத்மஜோதியின் விருப்பு. அதற்காக இந்துசமயப் பேரவையின் செயற்பாடுகளுக்கு ஆதரவு நல்குவதே ஆத்மஜோதிக்குநாம் செய்யும் அஞ்சலி என்றார். ஜி

## இம்முறை மா வழங்கப்படவில்லை

(அரியாலை)

இடம்பெயர்ந்தோருக்கான இலவச உணவுப் பொருட்கள் தற்போது வழங்கப்படுகின்றன.

அரிசி, சீனி, பருப்பு, கைலண்ட் பால்மா ஆகிய பொருட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

மா இம்முறை வழங்கப்படவில்லை. இதற்கிடையில் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ மா, கிலோ 8 ரூபா 50 சதமாக கூட்டுறவுக் கடைகளில் வழங்கப்படுகிறது 59

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான அவசரக்கூட்டம் எதிர்வரும் 18ம் திகதி திங்கட்கிழமை பி. ப 2-00 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யா/யூனியன் கல்லூரியில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது சமூகந்தரும்படி கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. மகேந்திரன் கேட்டுக்கொள்கிறார்.

# ஜெயலலிதா பதவி விலகவேண்டும் எதிர்க்கட்சிகள் வற்புறுத்து

(சென்னை)

கொடைக்கானலில் தனியார் ஹோட்டல் ஒன்றுக்கு தமிழக அரசு அனுமதி அளித்தது தொடர்பாக முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் உள்நாட்டுத்துறை அமைச்சர் செல்வகணபதிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றங்கள் தெரிவித்த கருத்துக்கள் சரியானதே என்று உச்ச நீதிமன்றம் கூறியிருப்பதால், செல்வி ஜெயலலிதாவும், செல்வகணபதியும் பதவி விலக வேண்டும் என தமிழக எதிர்க்கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தி. மு. க தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையொன்றில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது இருவரும் பதவி விலகாமல் மேல் முறையீடு செய்ததாகவும் தற்போது மேல் முறையீடே தள்ளுபடியாகிய நிலையில் இருவரும் பதவி விலகுவதே சரியானது என்றும் கூறியுள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

# அன்ரனேவ் விமான விபத்தில் பலியானோர் சடலம் மீட்கப்படவில்லை

## விமானி ஒருவரின் தலைப்பகுதி மட்டு மீட்பு

(கொழும்பு)

அன்ரனேவ் விமானம் கடலில் மூழ்கிய பகுதியிலிருந்து விமானி ஒருவரின் சிதைந்த தலைப்பகுதி மீட்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை சடலங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்றும் தேடுதலில் ஈடுபட்டுள்ள கடற்படை பிரிவின் சிரேஷ்ட அதிகாரி கமாண்டர் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தும் தீவிரமாக நடைபெற்ற போதும் இதுவரை எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

சுழியோடிகளால் விமானத்தை கடலின் அடியில் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு கிலோ மீற்றர் ஆழமான கடலில் விமானம் வீழ்ந்துள்ளது. இதனால் கடலினடியில் நீரோட்டம் மிக வேகமாயுள்ளது. இதனால் விமானம் வீழ்ந்து கிடக்கும் பகுதியை நெருங்க முடியாதுள்ளது.

தற்போது தேடுதல் நடவடிக்கையில் 3 கப்பல்கள், 2 விமானங்கள், 4 ஹெலி கொப்டர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் இப்பகுதியை எவரும் நெருங்க முடியாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சி-ரி

## விமான விபத்து குறித்த மர்மம் நீடிக்கிறது

(கொழும்பு)

'அன்ரனேவ்' விமான விபத்துகுறித்து தொடர்ந்தும் மர்மம் நிலவுவதாக 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகள் தெரிவித்துள்ளன

விமானத்தின் உதிரிப்பாகங்களோ சிதைந்த பகுதிகளோ கண்டு பிடிக்காத வரையும் விமானத்துடன் சேர்ந்து நீரில் மூழ்கியவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு அது தொடர்பான பூரண விசாரணை நடைபெறாத வரை இந்த விபத்து பற்றிய பின்னணி மர்மமாகவே உள்ளதாகவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

சி-ரி

# அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் குறித்து அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊரக மட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனங்காணுவது தொடர்பாக ஏற்கனவே தமிழீழ நிர்வாக சேவையின் உள்ளூராட்சிப் பகுதி சனசமூக நலனோம்பு, மூலவள நிலையங்கள், தமிழீழ ஊரக மேம்பாட்டு பங்கேற்பு அவைகள், தமிழீழ ஊரக மகளிர் மேம்பாட்டு பங்கேற்பு அவைகள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளது.

இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் மாதிரி படிவ அமைப்புக்கள் ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இதுவரை அறிவுறுத்தல்களையும், படிவங்களையும் கிடைக்கப்பெறாத சம்பந்தப்பட்ட பொதுசன பிரதிநிதித்துவ அமைப்புகள் நேரடியாக அவற்றைப்பெற்று எதிர்வரும் 28ம் திகதி பி. ப 4 மணிக்கு முன்பாக தாம் தெரிவு செய்த வேலைத்திட்டங்களை தமிழீழ நிர்வாக சேவைக்கு அனுப்பி வைக்கலாமென தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

-ரி

## பாண் தட்டுப்பாடு

(அரியாலை)

யாழ். நகரில் தற்பொழுது பாணுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. காலையில் ஒருவிதமாகப் பாண் கிடைத்தாலும் மாலையில் பாண் தட்டுப்பாடாக உள்ளது.

இது இவ்விதமிருக்க, பணிஸ், பட்டர் பாண், கேக், கல்பணிஸ் ஆகியவை தாராளமாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

59

## வீடு பார்க்க சென்றவர் ஷெல்லுக்கு பலியானார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை பகுதியிலுள்ள தனது வீட்டை பார்ப்பதற்கு சென்ற ஒருவர் பலாலி ஷெல்லுக்கிலக்காகி உயிரிழந்தார்

நேற்று முன் தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஐ. தனபாலசிங்கம் (வயது-39) என்பவரே இறந்தவராவார்.

இவரது சடலம் நேற்று காலை இப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

170-சி

# திலீபனின் தியாகச் சாவு எமது போராட்டத்தை வளர்த்துள்ளது

## அஞ்சலி நிகழ்வில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

எதிர்யானவன் தனதுமுழுப் பலத்தையும், வியூகத்தையும் பயன்படுத்தி இன்றைய இன அழிப்புப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறான்; இவர்களின்சகலபோர்த் தந்திரோபாயங்களையும் முறியடித்து இன்று எமதுபோராட்டம் பரிணாம வளர்ச்சி பெற்று வருகிறது; எமது தேசியத் தலைவரின் கூர்மையான வழி நடத்தலே எமது போராட்ட வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாக அமைகிறது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் தியாகி லெப். கேணல் திலீபனின் 8ம் ஆண்டு நினைவு நாள் உண்ணாவிரதப் பந்தலில் நேற்றுக்காலை நடைபெற்ற முதல்நாள் நிகழ்வில் கலந்து கொண்டு நேற்றைய உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

திரு. இளம்பரிதி தொடர் உரையாற்றுகையில்: இந்திய வல்லாதிக்கத்துக்கு எதிராக தியாகி லெப். கேணல் திலீபன் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தனது சாகும் வரையிலான உண்ணா நோன்பை ஆரம்பித்தார். தியாகி திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்து தியாகச் சாவைத் தழுவிக்கொண்ட கடந்த எட்டு ஆண்டுகாலத்தில் எமது போராட்டம் பெரும் வளர்ச்சியையும், வலுவையும் பெற்றுள்ளது. கோட்டையில் புலிக்கொடி எப்பொழுது பறக்கிறதோ அப்பொழுது தான் எமது தேசத்தின் விடிவு என்ற திலீபனின் கனவு 1990ம் ஆண்டில் கோட்டையில் புலிக்கொடி ஏற்றிவைக்கப்பட்டு நனவாக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

162-ரி

## இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒருவார கால நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் கடந்த 13ம் திகதிக்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒருவார கால விசேட உலர் உணவு வழங்கப்படும் என்று வலி கிழக்கு பிரதேச செயலர் தெரிவித்தார்,

அகதிமுகாம்களுக்கு வெளியே உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த மக்களில் 'அ' அட்டை வைத்திருக்கும் மக்களுக்கே இந்த ஒருவார கால உலர் உணவு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகதி முகாம்களில் தங்கியிருப்போருக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாகவும் வலி கிழக்கு பிரதேச செயலர் தெரிவித்தார். 170-ரி

### ஜெயலலிதா

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மேல்முறையீட்டுக்கு விண்ணப்பித்ததனால் தான் பதவி விலக வேண்டியதில்லையென அப்போது கூறிய ஜெயலலிதா தற்போது அவரது மனுதள்ளுபடியான நிலையில் நியாயப்படி பதவி விலகவேண்டும் என சட்டமன்ற எதிர்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கோரிக்கை விடுத்துள்ளார்.

### புன்னாலைக்கட்டுவன்

(1ம் பக்க தொடர்ச்சி)

பகுதியில் வைத்து தாக்குதல் தொடுத்ததாகவும் இச்சம்பவத்திலேயே மேற்படி இராணுவச்சிப்பாய் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வி ரி

# ஆறுயிரம் படையினருடன் ஒப்பரேஷன் ஷேக் காண்ட்-2

[கொழும்பு]

யாழ் குடாவில் படையினர் மேற்கொண்டுவரும் 'ஒப்பரேஷன் ஷேக்காண்ட்-2' இராணுவ நடவடிக்கையில் சுமார் 6000 இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இராணுவ நடவடிக்கையில் இதுவரை 8 படையினர் உயிரிழந்ததுடன் 70 பேர் வரை படுகாயமடைந்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கைக்கான முன்னோடியாகவும் பலாலி விமானத் தளத்தின் ஓடு பாதையை பாதுகாக்கும் நோக்கிலும் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சி-ரி

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் ஏற்படக்கூடிய போர்க் காயங்களுக்குரிய துரித முதலுதவியை ஆற்றும் வகையில், மக்களே தங்கள் பாதுகாப்பையும், மனவலிமையையும் வலுப்படுத்திக்கொள்வதற்கு உறுதுணையாகப் போர்க்கால முதலுதவிப் பயிற்சி வழங்கப்படுகிறது.

நாளை ஞாயிறு காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணிவரை வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்திலும், தொல்புரம் அ.மி.த.க. பாடசாலையிலும், சங்கானை பிரதேசச் செயலர் பிரிவிற்கு முதலுதவிப் பயிற்சி நெறி நடைபெறும்.

சி

## அழைப்பு

[யாழ்ப்பாணம்]

12ம் திகதி வலிகாமம் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இயங்க முடியாமல் இருக்கும் சுகாதாரத் திணைக்களங்களைச் சேர்ந்த அலுவலர்கள் தமது பணிமனைக்கு உடன் சமுகமளிக்குமாறு மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வை. ஸ்ரீகாந்தா கேட்டுள்ளார்.

-சி

### வலிகாமத்தை

(1ம் பக்க தொடர்ச்சி)

(வயது 56) கிளான் கே. செல்லத்துரை (வயது 40) செல்லத்துரை இதயராஜன் (வயது 18) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

மேலும் ஷெல்கள் அச்சுவேலிப் பிள்ளையார் ஆலயம் அச்சுவேலி இராசா வீதி. அச்சுவேலி வைத்தியசாலைப் பகுதி, சிறுப்பிட்டி அம்மன் கோவிலடி, வல்லைப்பாலம் வாழைத்தோட்டம், சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை போன்ற பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதன் காரணமாக பொது மக்கள் குடியிருப்புக்கள், பாலம், வாழைத்தோட்டங்கள், பெரும் சேதமடைந்தன

பலாலி இராணுவமும், வளலாயில் தரித்துள்ள இராணுவமும் இணைந்து அச்சுவேலி, ஆவரங்கால. புத்தூர், சிறுப்பிட்டி. போன்ற மக்கள் குடியிருப்புக்கள் மீது பலமணி நேரம் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை நேற்று நடத்தினர் இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் மேற்படி இடங்களில் இருந்து பெருமளவில் கால்நடையாக வடமராட்சி. தென்மராட்சி, வரணி கப்பூது. யாழ் போன்ற பகுதி நோக்கி வெளியேறினர்.

காலையில் ஆரம்பித்த இச் ஷெல் தாக்குதல் பிற்பகல் வரை இடம்பெற்றது. இச் ஷெல் தாக்குதலினால் வலிகாமம் பகுதி எங்கும் அதிர்ந்தது நூற்றுக்கும் மேற்பட்ட ஷெல்கள் வலிகாமத்தின் பலபகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

170-162-51-160-ரி

### புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏன் தடைசெய்யவில்லை என அவரிடம் வாஷிங்டனில் பத்திரிகையாளர்கள் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் கூறுகையில்: விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தி இனத்தகராற்றை தீர்க்க பேச்சுவார்த்தைக்கான கதவுகளை திறந்து வைப்பதற்காகவே அரசு புலிகளைத் தடைசெய்யவில்லை.

விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைப்பது குறித்து அரசு சில நிபந்தனைகளை முன் வைத்துள்ளது எனவும் கூறினார்.

சி-ரி

### ஒன்பது

(1ம் பக்க தொடர்ச்சி)

★ ஜி 3 ஏ3 துப்பாக்கிகள் 03
★ ஏ. கே. மகசீன்கள் 30
★ ஏ.கே.எல்.எம்.ஜி, 03
★ ஜி3. ஏ3 மகசீன்கள் 10
★ கைக்குண்டு 01
★ நேட்டோ ரவை 203
★ நடுத்தர ரவைகள் 1126
★ நடுத்தர ரவை லிங்குடன் 155

ஆகிய ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். ஞானசீலன், அல்லது முருகேசு பரமானந்தன் [மட்டக்களப்பு] வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

க-ரி

### தியாகி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிவப்பு மஞ்சள் வர்ணக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வீடுகள் தோறும் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகி லெப். கேணல் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு ஈகைச் சுடர் ஏற்றிமலர் மாலை அணிவித்து மக்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதானஇடங்களில் விசேட வளைவுகள் பந்தல்கள் அமைக்கப்பட்டு சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தியாகி திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த நேரமான காலை 9-55 மணியளவில் குடாநாடு பூராகவும் திலீபனின் நினைவு தின நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

யாழ். நகரப்பகுதி எங்கும் திலீபனை நினைவு கூரும் முகமாக வீதிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளதோடு தியாகி திலீபன் சம்பந்தமான பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. ஒலிபெருக்கி மூலம் தியாகியின் புரட்சிப் பாடல்கள் இசைக்கப்பட்டு வருகின்றன.

170-162-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.